CC.No. 118/2025
PW – 3
21.07.2026
பெயர் : பாக்கியம்
க/பெ. : பிச்சைமுத்து
எதிரிகள் ஆஜர்

**<u>எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவ சமயத்தில் நானும் கோவிந்தம்மாளும் வேலை பார்த்துக்கொண்டிருக்கும் போது அவர் மயங்கி கீழே விழுந்துவிட்டார். அதில் அவருக்கு தலையில் காயம்படவும் அவரை மருத்துவமனைக்கு அழைத்துசென்று விட்டார்கள். போலிசார் என்னை விசாரிக்கும் போதும் அவர் தடுமாறி மயங்கி கீழேவிழுந்து விட்டதாகத்தான் நான் கூறினேன். போலிசார் சொல்லிக்கொடுத்ததன் பேரில்தான் நான் முதல்விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளேன்.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 25.03.2026ம் தேதி இதேநீதிமன்றத்தில் முதல்விசாரணை சாட்சியமும் குறுக்குவிசாரணை சாட்சியமும் அளித்துள்ளேன் என்றால் சரிதான். நான் சாட்சியம் அளித்த பிறகு நீதிமன்றத்திற்கு வெளியே கோவிந்தம்மாள் இறப்பிற்காக எதிரிகளுடன் சமாதானம் செய்துகொண்டு நஷ்டஈடு பெற்றுக்கொண்டார்கள் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரிகளிடம் இருந்து நான் நஷ்டஈடு பெற்றுக்கொண்டதால் ஏற்கனவே நீதிமன்றத்தில் அளித்துள்ள சாட்சியத்துக்கு முரணாக எதிரிகளை காப்பாற்றவேண்டும் என்ற நோக்கத்தில் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Sd/–பாக்கியம்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

**Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**புதுக்கோட்டை.**